இரட்டைக்கிளவி

1. செல்வி அரையாண்டு தேர்வில் குறைந்த புள்ளிகளைப் பெற்றதால் அவளது அம்மா ____________ வென பேசினார்.

A. கடு கடு
C. நற நற
B. விறு விறு
D. கல கல

2. இந்திய வணிக சந்தையில் அம்மா வாங்கி வந்த பாத்திரங்கள் ____________ வென மின்னின.

A. தக தக
C. பல பல
B. பள பள
D. நற நற

3. கீழ்க்காணும் பொருளுக்கான சரியான இரட்டைகிளவியைத் தெரிவு செய்க .

| |
|---|
| காய்ந்த இலை ஒன்றோடொன்று உரசும்போது அல்லது மிதிபடும்போது ஏற்படும் ஓசை |

A. தக தக
C. தட தட
B. சர சர
D. தர தர

4. வானத்தில் நட்சத்திரங்கள் ____________ வென மின்னின.

A. தக தக
C. பள பள
B. சர சர
D. மினு மினு

5. காய்ந்து உதிர்ந்த இலைகளைக் கூட்டி துப்புரவு செய்யும் போது ________ வென சத்தம் கேட்டது.

A. தக தக
C. தர தர
B. சர சர
D. தட தட

6. தன் பேச்சைக் கேளாமல் தனது மகள் புதிய கைப்பேசியை வாங்கியதால் திரு கவின் ____________ வென இருந்தார்.

A. தக தக
C. கடு கடு
B. சர சர
D. மினு மினு

LIVEWORKSHEETS